Date : 10.03.2026

SC.No. : 255/2024

PW : 3

Name : **ராஜாராம் த.பெ. போஸ்**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**(எதிரி ஆஜர்)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் இரண்டுமுறை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அ.சா.2 முத்துப்பாண்டியனின் தங்கையை தான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 முத்துராஜா எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அம்மாவுடன் பிறந்த மூத்த சகோதரியின் மகன் ஆவார். என் மீது எத்தனை வழக்குகள் உள்ளது என்றால் இதே நீதிமன்றத்தில் பரதன் என்பவர் பிரிவு 307 இதச வழக்கு கொடுத்து குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதில் நான் விடுதலையாகிவிட்டேன். என் மீது சிப்காட் காவல்நிலையத்தில் வழக்கு உள்ளதா என்றால் ஆமாம். சிப்காட் காவல்நிலையத்திற்கும் சம்பவயிடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 7 கி.மீ இருக்கும். அ.சா.1 முத்துராஜா என்பவர் தலைக்கவசம் அணிந்திருந்ததால் அவருக்கு லேசான காயம் ஏற்பட்டது என்று போலிசார் விசாரிக்கும்போது வாக்குமூலம் கொடுத்துள்ளேனா என்றால் சரிதான்.

2. என்னுடைய ரத்தம்பட்ட ஆடைகளை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஆஸ்பத்திரியில் கொடுத்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அதில் ஆட்களும் வாகனங்களும் அதிகம் செல்லும் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எதிரி பாலமுருகன் அருவாளால் வலது முன்கையில் வெட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை இரண்டு முழங்கைகளிலும் வெட்டினார் என்று சொல்லியுள்ளேன். எதிரி முத்துச்சாமி என்பவர் எனது இடது முன்கையில் வெட்டினார் என்று போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3. எதிரி பசுபதி என்பவர் எனது இடது கால் பாதத்தில் வெட்டினார் என்று போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி கருப்பு என்பவர் எனது இரண்டு கால் முட்டிகளில் வெட்டினார் என்று போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி அங்குவிஜயன் என்பவர் எனது இடது கால்முட்டியில் வெட்டினார் என்று போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது வாக்குமூலங்களில் சிப்காட் காவல்நிலைய போலிசார் தான் தன்னை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. சித்தலூர் பாலமுருகானந்தம் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என்னுடைய பெரியப்பா மகன் ஆவார். அவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சித்தலூர் பாலமுருகானந்தம் என்பவர் வந்து என்னை பார்த்தாரா என்றால் பார்த்தார். இந்த சம்பவம் நடந்ததாக சொல்வதற்கு முன் எத்தனை வருடங்களாக சென்னையில் வசித்து வருகிறேன் என்றால் கடந்த 2010-ம் ஆண்டு முதல் வசித்து வருகிறேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் தான் உருளி பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஏரியா மக்கள் மானாமதுரை மற்றும் சிவகங்கை செல்லவேண்டும் என்றால் உருளி பேருந்து நிறுத்தம் வந்து தான் பஸ் ஏறி செல்லவேண்டும் என்றால் உருளி விலக்கில் பேருந்து நிறுத்தம் இல்லை. எத்தனை வருடங்களாக சென்னையில் வியாபாரம் செய்கிறேன் என்றால் 2018 ம் ஆண்டிலிருந்து வியாபாரம் செய்கிறேன். என்ன வியாபாரம் செய்கிறேன் என்றால் வீட்டுக்கு தேவையான ஆயில் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறேன்.

5. பட்டியல் சாட்சி நாகராஜ் எனக்கு என்ன உறவுமுறை என்றால் சித்தப்பா முறை ஆவார். மற்ற பட்டியல் சாட்சிகள் அனைவருமே எனக்கு உறவுக்காரர்கள் என்றால் சரிதான். இந்த எதிரிகளால் சொன்ன நாள் சொன்ன தேதியில் எந்த காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து, போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் அ.த.பொ.சா.3 அருவாள், அ.த.பொ.சா.4 பட்டாகத்தி குறித்து நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

6. எனக்கு ஏற்பட்ட காயங்கள் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது கரடுமுரடான சாலையில் கீழே விழுந்து ஏற்பட்ட காயங்களை எதிரிகளின் மீது உள்ள முன்விரோத்தின் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் முத்துச்சாமி , வைரமணி ஆகியோர்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சொன்ன நாள் சொன்ன தேதியில் சிவகங்கை சிவன் கோவிலில் வைரமணியின் தம்பி மகள் பண்ணக்கருப்பையா திருமணத்தில் கலந்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 15:50:13 +05'30'

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**